செ. கு. எண்: 136

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 7.6.2013**

நியாயமான வட்டி விகிதத்தில் கடன் மற்றும் நிதிச் சேவைகளை விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு அளித்து நலிந்த பிரிவு மக்களை நலம் பெறச் செய்யும் பணிகளை செவ்வனே ஆற்றி வருபவை தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடர்ந்து லாபத்தில் செயல்பட்டு, 2011-2012 ஆம் ஆண்டில் 41 கோடியே 51 லட்சம் ரூபாய் அளவிற்கு நிகர லாபம் ஈட்டியுள்ளது. இதன் கீழ் இயங்கும் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், 19 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடர் லாபத்திலும், மற்ற நான்கு வங்கிகள் நடப்பு லாபத்திலும் செயல்பட்டு வருகின்றன.

மேற்படி வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வழங்க வேண்டிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31-12-2010 உடன் முடிவுற்றது.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன், கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வினை 1.1.2011 முதல் வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைக் கேட்டுக் கொண்டேன்.

எனது உத்தரவின் பேரில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களின் ஊதிய விகித உயர்வு குறித்து பரிசீலனை செய்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், 16,000 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டு வணிகம் செய்து, தொடர்ந்து லாபம் ஈட்டி வரும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஒரு பிரிவாகவும்; 1,700 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டு வணிகம் செய்து தொடர் லாபம் ஈட்டி வரும் வங்கிகளை ஒரு பிரிவாகவும்; 1,700 கோடி ரூபாய் வரை வணிகம் செய்து, தொடர் லாபத்தில் இயங்கும் வங்கிகளை ஒரு பிரிவாகவும்; நடப்பு லாபத்தில், குவிந்த நட்டத்தில் (cumulative loss) இயங்கும் வங்கிகளை ஒரு பிரிவாகவும் பிரித்து, வங்கிகளின் செயல்பாடுகளுக்கு ஏற்ப பணியாளர்களுக்கு ஊதிய உயர்வினை வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார்.

இது குறித்து எனது தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (7.6.2013) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நடைபெற்ற விரிவான கலந்தாய்விற்குப் பிறகு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் ஊதிய உயர்வினை வழங்குமாறு நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி,

அ) தொடர்ந்து லாபத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 21 சதவிகித ஊதிய உயர்வு 1-1-2011 முதல் முன்தேதியிட்டு நிலுவைத் தொகையுடன் வழங்கப்படும்.

ஆ) 31.3.2012 தேதிய நிலவரப்படி 1,700 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டு வணிகம் மேற்கொண்டு, தொடர்ந்து நிகர லாபத்தில் செயல்பட்டு வரும் சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்பது மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 சதவிகித ஊதிய உயர்வு 1-1-2011 முதல் முன்தேதியிட்டு நிலுவைத் தொகையுடன் வழங்கப்படும்.

இ) 31.3.2012 தேதிய நிலவரப்படி 1,700 கோடி ரூபாய் வரை வணிகம் மேற்கொண்டு, நிகர லாபத்தில் செயல்பட்டு வரும் கும்பகோணம், திண்டுக்கல், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருவண்ணாமலை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய ஒன்பது மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 15 சதவிகித ஊதிய உயர்வு 1-1-2011 முதல் முன்தேதியிட்டு நிலுவைத் தொகையுடன் வழங்கப்படும்.

ஈ) வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 31.3.2012 தேதிய நிலவரப்படி, நிகர லாபம் மிகவும் குறைவாக உள்ளதால், இந்த வங்கியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 15 சதவிகித ஊதிய உயர்வு 1.1.2011 முதல் கணக்கிடப்பட்டு, நிலுவைத் தொகை 1-1-2012 முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும்.

உ) 31.3.2012 தேதிய நிலவரப்படி, குவிந்த நட்டத்திலும், நடப்பு லாபத்திலும் செயல்பட்டு வரும் நீலகிரி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, இவ்வங்கிகளின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 7 சதவிகித ஊதிய உயர்வு 1-1-2011 முதல் கணக்கிடப்பட்டு, நிலுவைத் தொகை 1.1.2013 முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான இந்த ஊதிய உயர்வு உரிய சட்ட நடைமுறைகளின்படி வழங்கப்படும்.

இந்த ஊதிய உயர்வு மூலம் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் 4,784 பணியாளர்கள் குறைந்த பட்சம் 1,630 ரூபாயும், அதிகபட்சம் 15,760 ரூபாயும் ஊதிய உயர்வு பெறுவர்.

இதனால், 55 கோடியே 82 லட்சம் ரூபாய் அளவிற்கு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஆண்டுதோறும் கூடுதல் செலவு ஏற்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**